**செய்தி வெளியீடு எண்: 068** **நாள் : 31.01.2016**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.1.2016 அன்று தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம் – அத்திப்பட்டில் 6376 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள நிலக்கரியில் இயங்கும் 1x800 மெகாவாட் வட சென்னை மிகஉய்ய அனல் மின் திட்டம் நிலை III –க்கு அடிக்கல் நாட்டி, இந்த மிகஉய்ய அனல் மின் திட்டத்தினை செயல்படுத்திட 2759 கோடி ரூபாய் ஒப்பந்த ஆணையினை பாரத மிகுமின் நிறுவனத்தின் (BHEL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.அதுல் சோப்தி அவர்களிடம் வழங்கினார்கள்.

வேளாண் வளர்ச்சிக்கும், தொழில் மேம்பாட்டிற்கும், முக்கிய காரணியாக விளங்கும் மின்சாரத்தின் தேவை தமிழ்நாட்டில் அதிகரித்துக் கொண்டே செல்வதை கருத்தில் கொண்டு, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றிட வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன், மின் உற்பத்தியை பெருக்குதல், மின் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மின் தொடரமைப்புகளை நிறுவுதல், மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்குதல் போன்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம் – அத்திப்பட்டில், வட சென்னை அனல் மின் நிலையம் I மற்றும் II அமைந்துள்ள வளாகத்தில் 250 ஏக்கர் நிலப் பரப்பளவில், 6376 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள நிலக்கரியில் இயங்கும் 1x800 மெகாவாட் வட சென்னை மிகஉய்ய அனல் மின் திட்டம் நிலை III –க்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மிகஉய்ய அனல் மின் தொழில் நுட்பத்தில் 800 மெகாவாட் திறனுடைய அலகு தமிழ்நாட்டில் அமைப்பது இதுவே முதன் முறையாகும். இத்திட்டம் ஆகஸ்டு 2019–ல் நிறைவு பெற்று, நாளொன்றுக்கு 19.2 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு சுமார் 6000 மில்லியன் யூனிட் மின்சாரம் தமிழ்நாட்டிற்கு கூடுதலாக கிடைக்கும்.

முதற்கட்டமாக, 1x800 மெகாவாட் வட சென்னை மிகஉய்ய அனல் மின் திட்டம் நிலை– III திட்டத்திற்கான கொதிகலன், சுழலி, மின்னாக்கி (Boiler, Turbine, Generator) தொகுப்பு மற்றும் அதன் சார்ந்த பொதுவியல் பணிகளுடன், பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானப் பணிகளான வடிவமைத்தல், உற்பத்தி, விநியோகம், நிறுவுதல், தேர்வாய்வுக்குப்பின் செயல்படவைத்தல், ஆகிய பணிகளுக்கு 2759 கோடி ரூபாய்க்கான ஒப்பந்த ஆணையினை பாரத மிகுமின் நிறுவனத்தின் (BHEL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.அதுல் சோப்தி (Mr. Atul Sobti) அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள் .

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), எரிசக்தித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம். சாய் குமார், இ.ஆ.ப., பாரத மிகுமின் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு.ஜி.கே. ஹெடா (Mr. G.K. Hedaoo) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 31 .1.2016